StudentBounty.com

35

Register Number

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண். 50 × 1 = 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர் :

அ) ஆதம் ஸ்மித் ஆ) சாமுவேல்சன்

இ) ஆல்ஃபிரடு மார்ஷல் ஈ) இலயனல் ராபின்ஸ்.

2. சமதர்ம பொருளாதாரத்தில், உற்பத்தி, மற்றும் பகிர்வு சார்ந்த தீர்வுகளை முடிவுசெய்வது

அ) சந்தை ஆ) மத்திய திட்டக்குழு

இ) பழக்கவழக்கமும், மரபுகளும் ஈ) தனியார் துறை

3. சமநோக்கு வளைகோட்டின் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஆல்ஃபிரடு மார்ஷல்

ஆ) இலயனல் ராபின்ஸ்

இ) J.R. ஹிக்ஸ் மற்றும் R.G.D. ஆலன்

ஈ) ஆதம் ஸ்மித்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



4. தேவைவிதி உணர்த்துவது

அ) விலை, பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு

ஆ) விலை, பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு

இ) மேற்கூறிய இரண்டும்

ஈ) எதுவுமில்லை.

5. அளிப்பைத் தீர்மானிக்கும் காரணிகள்

அ) உற்பத்தி தொழில் நுட்பம்

ஆ) உற்பத்தி காரணிகளின் விலைகள்

இ) வரிகளும், சலுகைகளும்

ஈ) மேற்கூறிய அனைத்தும்.

6. சமநிலை விலைக்கும் மேல்

அ) S < D ஆ) S > D

இ) S = D ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

7. ............... ஏற்கும் ஒருவரே வெற்றிகரமான "தொழில் முனைவோர்" ஆவார்.

அ) புத்தாக்கம் புனைதல்

ஆ) இடர்பாடுகளை

இ) உற்பத்தி அலகின் இடத்தை தேர்ந்தெடுத்தல்

ஈ) இவற்றுள் ஏதுமில்லை.

8. சராசரி மாறாச் செலவு எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?

அ) TC/Q ஆ) TFC/Q

இ) TVC/Q ஈ) இவற்றுள் ஏதுமில்லை.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

9. எந்நிலையில் ஒரு நிறுவனம் சமநிலை பெறும்

அ) MC = MR　　ஆ) MC = AC

இ) MR = AR　　ஈ) MR = AC.

10. நீர்மை விருப்பக் கோட்பாட்டின் ஆசிரியர்

அ) J.M. கீன்ஸ்　　ஆ) மார்ஷல்

இ) சாமுவேல்சன்　　ஈ) நைட்.

11. பேரியல் பொருளாதாரத்தின் மையப்பிரச்சினை

அ) வருமானமும் வேலை வாய்ப்பும்　　ஆ) விலையும் வெளியீடும்

இ) வட்டியும் பணமும்　　ஈ) இவற்றுள் ஏதுமில்லை.

12. இறுதிநிலை நுகர்வு நாட்டம்

அ) $\Delta S/\Delta Y$

ஆ) $C/Y. \Delta P/\Delta Q$

இ) $\Delta P/\Delta Q$

ஈ) $\Delta C/\Delta Y$.

13. விலைவாசி உயர்வு மற்றும் தேவை தேக்கம் உள்ள சூழ்நிலை அழைக்கப்பெறுவது

அ) செலவு - உந்து பண வீக்கம்　　ஆ) தேவை ஈர்ப்பு பண வீக்கம்

இ) நிலைத்தன்மை பணவீக்கம்　　ஈ) கூலி உந்து பணவீக்கம்.

14. வரி வருவாய் என்பது .................... பற்றியதாகும்

அ) கட்டணம்

ஆ) பல வகையான வரிகள்

இ) வருவாய்

ஈ) வரி அல்லாத வருவாய்.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. பொருளாதாரம் என்பது ........................ அறிவியலாகும்.

16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ........................ எனவும் அழைக்கப்படுகிறது.

17. மார்ஷலின் பயன்பாட்டு அணுகுமுறை என்பது ........................ பகுப்பாய்வாகும்.

18. சமுதாய அந்தஸ்துக்காக தேவைப்படும் பண்டங்கள் ........................ விளைவாகும்.

19. அங்காடி காலத்தில் அளிப்புக்கோடு ........................ .

20. ஓர் அங்காடியின் விரிவு ........................ முறையின் அளவைத் தீர்மானிக்கிறது.

21. மாறாக் காரணிகள் மற்றும் மாறும் காரணிகளை ........................ல் மட்டுமே வேறுபடுத்த இயலும்.

22. நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் ........................ .

23. இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு ........................ போட்டி சந்தையின் எடுகோளை அடிப்படையாகக் கொண்டது.

24. ........................ என்பது மக்களின் கையிருப்பு (ரொக்கம்) பணம் ஆகும்.

25. பரிமாற்றச் சமன்பாடு MV = PT என்பதை அளித்தவர் ........................ ஆவார்.

26. நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்புமுறை ........................ அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்படுகிறது.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 ×

| | | | |
|---|---|---|---|
| 27. | முதல் நோபல் பரிசு | அ) | $C + I + G + (X - M)$ |
| 28. | குறைந்தபட்ச உற்பத்தி செலவு | ஆ) | $D > S$ |
| 29. | அதிகபட்ச சமூக நன்மைகள் | இ) | புதிய தொண்மைகால கோட்பாடு |
| 30. | தேனீர் மற்றும் காபி | ஈ) | டிம்பர்கன் மற்றும் ஃபிரிஷ் |
| 31. | மிகைத் தேவை | உ) | $TC_n - TC_{n-1}$ |
| 32. | இடர்பாடுகளின் தொகுப்பு | ஊ) | ஹிக்ஸ் மற்றும் டால்டன் |
| 33. | $MC_n$ | எ) | பதிலீட்டுப் பண்டங்கள் |
| 34. | தொழில்நுட்ப முற்றுரிமை | ஏ) | ஹாலே |
| 35. | கடன் நிதிக்கோட்பாடு | ஐ) | அறிவுறுத்தல் |
| 36. | ஒட்டுமொத்த தேவை | ஒ) | கோகோ கோலா |
| 37. | கடன் தன்மைக் கட்டுப்பாடு | ஓ) | ஆதம்ஸ்மித் |
| 38. | புனித வரிவிதிப்பு முறை | ஔ) | அதிகபட்ச நன்மை. |

IV. பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு சொற்களில் விடை தருக: 12 × 1 = 12

39. இலவசப் பண்டங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.

40. பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இருநாடுகளைக் கூறுக.

41. நிதிநிலை கோட்டிற்கு மற்றொரு பெயர் என்ன ?

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



42. புள்ளிமுறையின் வாய்ப்பாடு யாது ?

43. காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

44. உற்பத்தியாளர் சமநிலை அடைய நிபந்தனை யாது ?

45. சராசரி செலவை எவ்வாறு கணக்கிடுவாய் ?

46. விற்பனைச் செலவின் முக்கிய வடிவம் எது ?

47. ஏஜியோ வட்டிக் கோட்பாட்டின் ஆசிரியர் யார் ?

48. ஒட்டுமொத்த தேவையும், ஒட்டுமொத்த அளிப்பும் சந்திக்கும் புள்ளிக்கு என்ன பெயர் ?

49. மிகை வேகப் பணவீக்கத்தினை சந்தித்த ஒரு நாடு எது ?

50. வரி என்பது என்ன ?

## பகுதி - ஆ

V. *குறிப்பு :* i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைத்திட வேண்டும். $10 \times 3 = 30$

51. பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம் யாது ?

52. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக.

53. வாய்ப்பு செலவு என்றால் என்ன ?

54. மார்ஷலின் கூற்றுப்படி "நுகர்வோர் - உபரி" யைக் கூறுக.

55. தேவைக் கோடானது ஏன் கீழ்நோக்கி வருகிறது ?

56. நீண்டகாலம், குறுகிய காலம் வேறுபடுத்துக.

57. அங்காடிக் காலம் சிறுகுறிப்பு வரைக.

58. வேலைப் பகுப்பு முறை என்பதன் பொருள் யாது ?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



59. மூலதனத்தின் வடிவங்கள் யாவை ?

60. இறுதிநிலைச் செலவு என்றால் என்ன ?

61. பொருளாதாரச் செலவு என்றால் என்ன ?

62. நிறைவுப்போட்டி அங்காடியின் மூன்று நன்மைகளை எழுது.

63. நீர்மை விருப்பக் கோட்பாட்டின் மூன்று நோக்கங்கள் யாவை ?

64. பணத்தின் இலக்கணத்தை கூறுக.

65. பூஜ்ய ( Zero-based Budget ) நிதிநிலை அறிக்கை என்றால் என்ன ?

## பகுதி - இ

VI. *குறிப்பு :* i) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவில் அமைத்திட வேண்டும்.

6 × 10 = 60

66. கலப்பு பொருளாதாரத்தின் நன்மை, தீமைகளை விவரி.

67. தேவைக்கோடு இடம் பெயர்தலை வரைபடத்துடன் விளக்குக.

68. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?

69. நீண்டகால சராசரி செலவு வளைக்கோட்டை வரைபடத்துடன் விளக்குக.

70. குறுகியகால சராசரி செலவு வளைகோட்டிற்கும் (SAC) குறுகியகால இறுதிநிலை செலவு வளைகோட்டிற்கும் (SMC) இடையேயுள்ள தொடர்பை விளக்கு.

71. முற்றுரிமையாளர் போட்டியில் வீண்செலவுகளைப் பற்றி விளக்குக.

72. கீன்சின் கோட்பாட்டின் சாராம்சத்தை படம் வரைந்து விளக்கு.

73. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளை விவரி.

74. மாநில அரசின் முக்கிய வரிவருவாய் மற்றும் வரியற்ற வருவாய் எவையெவை ?

75. ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பதை விளக்குக. சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - ஈ

VII. *குறிப்பு :* i) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் மூன்று பக்க அளவில் அமைத்திட வேண்டும்.

3 × 20 = 60

76. பொருளாதார விதிகளின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

77. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை ?

78. விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகளை விவரமாக எழுதவும்.

79. குறுகிய காலத்தில், நிறைவுப் போட்டியில், விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ?

80. ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

81. பணவீக்கத்தின் காரணங்கள், விளைவுகள் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை விவரிக்கவும்.

———————

www.StudentBounty.com
Homework Help & Pastpapers